

பாடம் 3

ஜூலை 13-19

# சர்ச்சைகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மாற்கு 2:1–3:6; மீகா 6:6–8; 1சாமு 21:1–6; மாற்கு 3:20–35; லூக்கா 12:53; 14:26.

**மனன வசனம்:** 'பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்'. மாற்கு 2:27,28.

மதத்தலைவர்களுடைய போதனைகளுக்கு மாறாக இயேசுவின் போதனை இருந்ததை எடுத்துக்காட்டுகிற ஐந்து சம்பவங்கள் மாற்கு 2:1-3:6இல் உள்ளன. அந்தச் சம்பவங்களில் ஒரு குறிப்பிட்ட பாணி காணப்படுகிறது; அடுத்தடுத்த சம்பவங்கள் முந்தின சம்பவங்களின் ஒரு தலைப்புடன் சம்பந்தப்படுகிறது. கடைசிச் சம்பவம் ஒரு வட்டமடித்து, முதல் சம்பவத்துடன் தொடர்புபடுகிறது.

இந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றும் இயேசு யாரென்பதின் அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றன; மாற்கு 2:10,17,20,28 வசனங்களை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஞாயிறு, திங்கள், செவ்வாய்ப் பாடங்கள் இந்தச் சம்பவங்களையும், அவற்றில் வரும் இயேசுவின் வார்த்தைகளையும் ஆழமாக ஆராய்கின்றன.

மாற்கு 3:20-35ஐ புதன், வியாழன் பாடங்களில் ஆராயலாம்.

சுவிசேஷ எழுத்தாளர் பயன்படுத்துகிற ஒரு உத்தி பற்றியும் பார்ப்போம்; அது 'இடைச்செருகல்' உத்தி. மாற்குவில் குறைந்தப்பட்சம் ஆறுமுறை இந்த உத்தியைப் பயன்படுத்தி சம்பவங்களைச் சொல்லியிருக்கிறார். ஒவ்வொன்றிலும், இயேசுவின் தன்மை, மேசியாவாக அவரது பங்கு, சீடத்துவதின் இயல்புகுறித்து வலியுறுத்தப்படுகிறது.

இந்த வாரம், இயேசுவைக்குறித்த சில சம்பவங்களை வாசித்து, அவற்றிலிருந்து கற்றுக்கொள்வோம்.

*2024 ஜுலை 20 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# திமிர்வாதக்காரனைக் குணமாக்குதல்

**இயேசுவிடம் கொண்டுவரப்பட்டபோது திமிர்வாதக்காரன் எதிர்பார்த்தது என்ன? அவன் பெற்றுக்கொண்டது என்ன? மாற்கு 2:1-12.**

அவனுக்கு முடக்குவாதம் இருந்தது; அதனால் அவனது நான்கு நண்பர்கள் அவனை இயேசுவிடம் சுமந்துசெல்ல வேண்டியிருந்தது. அவர்கள் கூரையைப் பிரித்து, இயேசுவுக்குமுன்பாக அவனை இறக்கினார்கள்; இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டதாக மாற்கு 2:5 கூறுகிறது. விசுவாசம் எவ்வாறு கண்கூடாகத் தெரியக்கூடும்? அன்பைப்போல அதுவும் செயலில் தெரிகிறது; அந்த நண்பர்களின் விடாமுயற்சி அதை வெளிப்படையாகக் காட்டுகிறது.

அவனுக்கு சரீரக் குணமாகுதல் தேவைப்பட்டது. ஆனால் அவன் இயேசுவின் பிரசன்னத்தில் வந்ததும், இயேசு பேசின முதல் வார்த்தைகள் பாவமன்னிப்பு பற்றியது. அந்தச் சம்பவம் முழுவதிலும் அந்த மனிதன் பேசவே இல்லை. மாறாக, மதத்தலைவர்கள்தாம் இயேசுவின் வார்த்தைகளுக்கு தங்கள் மனதில் ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். அவர் தேவதூஷணம் பேசுவதாகவும், தேவனைத் திட்டுவதாகவும், தேவனுக்கு மட்டுமே உரிய உரிமைகளை எடுப்பதாகவும் கருதுகிறார்கள்.

ஆட்சேபனைக்காரர்களை அவர்களது கருத்தை வைத்தே இயேசு மடக்குகிறார்; அது வெளிப்படையான ஒரு சிறிய கருத்தை வைத்து பெரிய கருத்தை விளக்குகிற ரபிமார்களின் பாணியாகும். ஒருவருடைய பாவம் மன்னிக்கப்பட்டது என்று சொல்லுவது வேறு; திமிர்வாதமுடைய ஒருவரை நடக்கவைப்பது வேறு. இயேசு தேவ வல்லமையால் ஒருவரை நடக்கவைக்க முடியுமானால், தம்மால் பாவங்களை மன்னிக்கமுடியும் என்று அவர் சொல்லுவதும் உண்மையாகத்தான் இருக்கவேண்டும்.

**இயேசுவுக்கும் அந்தத் தலைவர்களுக்கும் இடையே நடந்ததை மீகா 6:6-8 எவ்வாறு விளக்குகிறது?**

உண்மையில் எது முக்கியம் என்பதை அந்த மதத்தலைவர்கள் மறந்துபோனார்கள்: நீதிசெய்வதும், இரக்கம்காட்டுவதும், தேவனுக்குமுன் தாழ்மையாக நடப்பதும்தான் முக்கியம். தேவனைப்பற்றி தாங்கள் புரிந்திருந்த கருத்திலேயே மூழ்கியிருந்ததால், தங்கள் கண்களுக்குமுன்பாக தேவன் செய்ததைக் காணமுடியவில்லை. தாம் தேவனிடமிருந்து வந்திருந்ததற்கான அதிக ஆதாரத்தைக் கொடுத்தார்; அவர்கள் மனதை தம்மால் வாசிக்கமுடியுமெனக் காண்பித்தார். அது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. அவர்களால்கூட மறுக்கமுடியாத அளவுக்கு அவர்கள் முன்பாகவே அந்தத் திமிர்வாதக்காரனைக் குணமாக்கினார்; ஆனாலும் அவர்கள் மனது மாறியதாக எந்தக் குறிப்பும் இல்லை.

---

**இந்த மனிதர்கள் விழுந்த அதே கண்ணியில் விழாமல் நாம் எவ்வாறு தப்பலாம்? அதாவது, மதச்சடங்குகளில் மூழ்கியிருந்ததால், மெய்மார்க்கத்தின் விஷயங்களைக் காணமுடியாத நிலைக்குச் சென்றதிலிருந்து எவ்வாறு தப்பிக்கலாம்? யாக்கோபு 1:27.**

# லேவியை அழைத்தல், உபாவாசம்பற்றிய கேள்வி

**அல்பேயுவின் குமாரனாகிய லேவி யார்? அவர் இயேசுவின் சீடராவதற்கு ஏன் ஆட்சேபனை இருந்திருக்கும்? மாற்கு 2:13-22.**

இயேசுவின் நாட்களில் ஆயக்காரர்கள் உள்ளூர் அல்லது ரோம அரசின் கீழ் வரிவசூலிக்கிற வேலை செய்தார்கள். யூதேயாவில் யூதமக்களுக்கு அவர்களைப் பிடிக்காது; ஏனென்றால் வசூலிக்கவேண்டிய தொகையைவிட அதிகமாக வசூலித்து, தங்கள் சொந்த மக்களையே கொள்ளையடித்து செல்வந்தர்களானார்கள். யூதச்சட்டங்களின் விளக்கவுரையான மிஷ்னாவிலிருந்து எடுக்கப்பட்ட டோஹோரோத் எனும் துண்டுப்பிரசுரம், ''வரிவசூலிப்பவர்கள் ஒரு வீட்டிற்குள் நுழைந்தால், வீடும் அதிலுள்ள அனைத்தும் சேர்த்து தீட்டுப்படும்'' என்று சொல்கிறது.

அதனால்தான் வேதபாரகர்கள் தாங்கமுடியாமல், ''அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறது என்ன?'' என்று கேட்கிறார்கள்.

இயேசு அவர்கள் கேள்விக்கு எவ்வாறு பதிலளித்தார்? அதைப் புறக்கணிக்கவில்லை. மாறாக, வித்தியாசமாக அணுகுகிறார்; சுகமுள்ளவர்களுக்கு அல்ல, வியாதியஸ்தர்களுக்கே மருத்துவர் தேவை என்கிறார். அதன்மூலம் தம்மை, பாவத்தால் பாதிக்கப்பட்ட ஆத்துமாவைக் குணமாக்கக்கூடிய ஆவிக்குரிய மருத்துவரெனச் சொல்லுகிறார். வியாதியஸ்தர்கள் இருக்கிற இடத்தைத் தேடி மருத்துவர் செல்லக்கூடாதா?

மாற்கு 2:18-22இல் ஒரு புதிய கருத்து வைக்கப்படுகிறது. சர்ச்சைகள் சம்பந்தப்பட்ட ஐந்து சம்பவங்களில் இது நடு சம்பவம். முந்தின சம்பவம் லேவி கொடுத்த ஒரு விருந்து சம்பந்தப்பட்டது; அடுத்த சம்பவம் உபவாசம் சம்பந்தப்பட்டது. பரிசேயர்களின் சீடர்களும் யோவான் ஸ்நானனுடைய சீடர்களும் உபவாசமிருக்கும்போது, இயேசுவின் சீடர்கள் ஏன் உபவாசம் இருப்பதில்லை என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு இயேசு உவமையாக, தம்முடைய பிரசன்னத்தை கலியாண விருந்துடன் ஒப்பிட்டுப் பேசுகிறார். கலியாண விருந்தில் விருந்தினர்கள் உபவாசமிருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் மணவாளன் எடுத்துக்கொள்ளப்படுகிற ஒரு நாள் வருமென, சிலுவையை மனதில் வைத்து முன்னுரைக்கிறார். அதன்பிறகு உபவாசிப்பதற்கு அதிக நேரம் இருக்கும்.

கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைப்பதில்லை, புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைப்பதில்லை என்று இயேசு தொடர்ந்து சொல்லுகிற இரண்டு விளக்கங்கள், மதத்தலைவர்களின் போதனை வேறாகவும், அவரது போதனை வேறாகவும் இருப்பதைக் காட்டுகின்றன. இரு போதனைகளையும் சுவாரசியமாக வேறுபடுத்திக் காட்டினார். போதகர்கள் எவ்வளவுதூரம் சீர்கெட்டுப்போயிருந்தார்கள் என்பதையும் இது வெளிப்படுத்துகிறது. கவனமாக இல்லாவிட்டால், மெய்ப்பக்திகூட அந்தகாரமாக மாறிவிடக்கூடும்.

---

**இயேசுவின் நாட்களிலிருந்த ஆயக்காரர்களுக்கு இணையாக இன்று யாரையெல்லாம் சொல்லலாம்? அவர்களைப்பற்றிய நமது எண்ணத்தை எவ்வாறு சரிசெய்யலாம்?**

# ஓய்வுநாளுக்கும் ஆண்டவர்

சீடர்கள் ஓய்வுநாளை மீறினதாக பரிசேயர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். மாற்கு 2:23,24. யூதப் பாரம்பரியத்தின்படி, 39 வகையான வேலைகளை ஓய்வு நாளில் செய்யக்கூடாது; அதில் சீடர்கள் செய்த்தும் ஒன்றென பரிசேயர்கள் கருதி னார்கள்.

**பரிசேயர்களின் குற்றச்சாட்டை இயேசு எவ்வாறு மறுத்துப்பேசுகிறார்? மாற்கு 2:23-28.**

---

---

இயேசு பதிலளித்தபோது, பரிசுத்த அப்பத்தை தாவீது சாப்பிட்டதைச் சுட் டிக்காட்டுகிறார். 1சாமு 21:1-6. பரிசுத்த அப்பம் ஓய்வுநாளில் எடுக்கப்படும்; எனவே, தாவீது அவசரமாகத் தப்பிக்கவேண்டிய சூழல் ஓய்வுநாளில்தான் ஏற் பட்டிருக்க வேண்டும். அப்போது, தாவீதும் அவரோடிருந்தவர்களும் பரிசுத்த அப்பத்தைச் சாப்பிட்டது தவறில்லையென்றால், தம் சீடர்கள் கதிர்களைக் கொய்து சாப்பிட்டது தவறில்லை என்று இயேசு கூறுகிறார்.

மேலும், ஓய்வுநாள் மனிதனுடைய நன்மைக்காக உண்டாக்கப்பட்டதே அன்றி வேறில்லை என்றும் கூறுகிறார்; அவர்தாமே ஓய்வுநாளுக்கு ஆண்ட வராக இருப்பதால், அவரால் அதைச் சொல்லமுடிகிறது.

**ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டதென இயேசு சொன்ன கருத்தை மாற்கு 3:1-6இன் சம்பவம் எவ்வாறு விளக்குகிறது?**

---

---

மீண்டும் ஓய்வுநாள் சம்பந்தமாக மதத்தலைவர்கள் இயேசுவிடம் சர்ச்சை பண்ணுகிறார்கள். ஆனாலும், ஓய்வுநாளைப்பற்றி அந்த சர்ச்சை எழவே இல்லை என்பதைக் கவனிக்கவேண்டும். ஓய்வுநாளில் இயேசு குணமாக்கினால் அவ ரைக் குற்றஞ்சாட்ட விரும்பினார்கள். அவர்களது கேள்வியைச் சந்திக்க இயேசு தயங்கவில்லை. நன்மை செய்வதா அல்லது தீமை செய்வதா? உயிரைக் காப் பதா அல்லது உயிரை அழிப்பதா? எது நல்லதெனக் கேட்கிறார். அவரது கேள் விக்கான பதில் தெளிவானதே: நன்மைசெய்வதும், உயிரைக் காப்பதும் ஓய்வு நாளில் செய்யக்கூடிய சரியான செயல்களே.

இயேசு அவனைக் குணமாக்குகிறார்; அதனால் அவரது எதிரிகள் சீற்ற மடைந்து, அவரைக் கொலைசெய்ய உடனே திட்டம் தீட்டுகிறார்கள். இந்தச் சம்பவத்தின் முரண் என்னவென்றால், ஓய்வுநாளில் இயேசுவைக் குற்றவாளி யாகப் பிடிக்க நினைத்தவர்கள்தாமே அந்நாளில் அவரைக் கொல்ல சதித்திட்டம் போட்டதின் நிமித்தம் ஓய்வுநாளை மீறுகிறார்கள்.

---

**ஓய்வுநாளைக் கைக்கொள்வதுகுறித்தும், இன்றைய நாட்களில் ஓய்வுநாள் ஆசரிப்பு சம்பந்தமாக எழுகிற சவால்கள்குறித்தும் என்ன நியதிகளை இந்தச் சம்பவத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்?**

# 'இடைச்செருகல்' சம்பவம்: பகுதி 1

**மாற்கு 3:20-35இலுள்ள இரண்டு சம்பவங்களுக்கும் இடையே என்ன தொடர்பைக் காணமுடிகிறது?**

மாற்குவில் இந்த வேதப்பகுதியில்தான் முதலாவது 'இடைச்செருகல் சம்பவம்' வருகிறது. அதாவது, ஒரு சம்பவம் தொடங்குகிறது; இடையிலேயே இன்னொரு சம்பவம் வருகிறது; அதன்பிறகு முதலாவது சம்பவம் முடிகிறது.

இதில் முதல் சம்பவம் இயேசுவின் உறவினர்கள் அவர் மதிமயங்கிவிட்டதாக நினைத்து, அவரைப் பிடித்துக்கொள்ளும்படி வந்தது. மாற்கு 3:21. இடைச்செருகல் சம்பவம் எருசலேமிலிருந்து வந்த வேதபாரகர்கள், அவர் பிசாசுடன் சேர்ந்து செயல்படுவதாக அவரைக் குற்றஞ்சாட்டியது. மாற்கு 3:22-30இல் வருகிற இடைச்செருகல் சம்பவம் பற்றித்தான் இன்று ஆராயப்போகிறோம்.

மாற்கு 3:22இல், பிசாசிடமிருந்து குணமாக்குகிற வல்லமை இயேசுவுக்குக் கிடைப்பதாக வேதபாரகர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அதற்குப் பதில்சொல்லுகிற வகையில் இயேசு ஒரு முக்கிய கேள்வியை முதலாவது கேட்கிறார்: 'சாத்தான் எவ்வாறு சாத்தானை விரட்ட முடியும்?' சாத்தான் தனக்கு எதிராகவே செயல்படுவதாகச் சொல்லுவதில் அர்த்தமில்லை. ஒரு ராஜ்யமோ, வீடோ, ஏன் சாத்தானோகூட பிரிந்திருந்தால், அவர்களுடைய வெற்றிக்கு அது எப்படி உதவமுடியுமெனக் கேட்கிறார். பிறகு அவர்கள் எதிர்பேச முடியாத ஒரு வாதத்தை முன்வைக்கிறார்; பலவான் ஒருவனை முந்திக் கட்டினால்தான், அவனுடைய வீட்டைக் கொள்ளையிட முடியும். இங்கே, இயேசு சாத்தானுடைய வீட்டிற்குள் நுழைகிற திருடனைப்போல, அந்தகாரத்தின் அதிபதியைக் கட்டிப்போட்டு, அவனால் சிறைப்பட்டவர்களை விடுவிக்கிறார்.

**மன்னிக்கப்படாத பாவம் எது? அதன் அர்த்தம் என்ன? மாற்கு 3:28-30.**

மன்னிக்கப்படாத பாவம் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகச் செய்கிற பாவம்; ஆவியானவரின் கிரியையை பிசாசின் கிரியையெனச் சொல்கிற பாவம். மாற்கு 3:28,29இல் தாம் சொல்கிற விஷயங்களுக்கான காரணத்தை மாற்கு 3:30இல் கூறுகிறார்; ஏனென்றால், அவரிடம் அசுத்த ஆவி இருப்பதாக வேதபாரகர்கள் சொன்னார்கள்; உண்மையில் அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார். பரிசுத்த ஆவியானவரின் கிரியையை ஒருவர் பிசாசின் கிரியையென அழைத்தால், அந்த நபர் பரிசுத்த ஆவிக்குச் செவிகொடுக்கமாட்டார்; ஏனென்றால், ஆவியானவரின் கிரியையை பிசாசின் கிரியை என்கிறாரே.

**'மன்னிக்கப்படாத பாவத்தை' நான் செய்திருக்கலாம் என்று உங்களுக்கு பயமிருந்தால், நீங்கள் அதைச் செய்யவில்லை என்பதை அந்தப் பயம் எவ்வாறு வெளிப்படுத்துகிறது? அதை நீங்கள் செய்யவில்லை என்பதற்கு உங்கள் பயம்தானே எவ்வாறு சாட்சியாக உள்ளது?**

# ‘இடைச்செருகல்’ சம்பவம்: பகுதி 2

**எந்த அனுபவம் இயேசுவின் குடும்பத்தார் அவரை மதிமயங்கியவராகக் கருதச் செய்தது? மாற்கு 3:20,21.**

---

புத்தி சரியில்லாதவர் என்பது ஒரு பயங்கர குற்றச்சாட்டு. தன்னைத்தானே புண்படுத்துபவரை பொதுவாகஇவ்வாறு குற்றஞ்சாட்டுவார்கள். அவ்வாறுதான் இயேசுவின் குடும்பத்தார் அவரைக் கருதியிருக்க வேண்டும்; ஏனென்றால் சாப்பிடக்கூட நேரம் எடுக்காமல், பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார். அவரைப் பிடித்துக்கொள்வதற்காகச் சென்றார்கள்; அப்போதுதான் முதல் சம்பவத்திற்கு இடையே இரண்டாம் சம்பவம் புகுத்தப்படுகிறது; அது பிசாசுடன் சேர்ந்து இயேசு செயல்படுவதாக வேதபாரகர்களின் குற்றச்சாட்டு சம்பவம்.

இந்த இடைச்செருகல் சம்பவத்தில், முதலாம் சம்பவத்திற்கும் இடைச் சம்பவத்திற்கும் இடையே விநோதமான ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. வேதபாரகர் அவரைப் பார்த்த அதே கண்ணோட்டம்தான் இயேசுவின் குடும்பத்தாரிடமும் காணப்பட்டது. அவர் பிசாசுடன் சேர்ந்து செயல்படுவதாக வேதபாரகர்கள் சொல்லுகிறார்கள்.

**இயேசுவின் குடும்பத்தார் விரும்பியது என்ன? அதற்கு அவருடைய பதில் என்ன? மாற்கு 3:31-35.**

அது சற்று விநோதமான காட்சிதான். உங்கள் தாயோ குடும்ப அங்கத்தினர்களோ உங்களைப் பார்க்க வந்தால், சந்திக்கமாட்டீர்களா? பிரச்சினை என்னவென்றால், இயேசுவின் குடும்பத்தார் அப்போது தேவ சித்தத்திற்கு இசைந்தவர்களாக இல்லை. இயேசு அந்த உண்மையை உணர்ந்திருந்தார்; அதனால்தான் யார் தம் குடும்பத்தாரென விளக்குகிறார். தேவ சித்தத்தைச் செய்கிறவர்களே அவருக்கு சகோதரனும் சகோதரியும் தாயுமாக இருக்கிறார்கள். அவர் தேவ குமாரன்; தேவ சித்தத்திற்கு இசைந்தவர்கள் அவருடைய குடும்பத்தினராகிறார்கள்.

மாற்குவின் இந்த இடைச்செருகல் சம்பவத்தின் இரு கதைகளிலும் ஒரு ஆழமான முரண்பாடு உள்ளது. இடைக்கதையில், தன்னில்தானே பிரிந்திருக்கிற வீடு நிலைத்திருக்க முடியாதென இயேசு சொல்லுகிறார். ஆனால் இயேசுவின் சொந்தக் குடும்பத்தாரே பிரிந்திருப்பது போலத்தான் முதலில் பார்த்ததும் தோன்றுகிறது! ஆனால் இயேசு தமது குடும்பம்பற்றிக் கொடுக்கிற மறுவரையறையில் இந்தப் புதிருக்கு விடை கிடைக்கிறது. அவருடைய உண்மையான குடும்பத்தார், அவரோடு சேர்ந்து தேவ சித்தத்தை நிறைவேற்றுபவர்கள். லூக்கா 12:53; 14:26.

வரலாறு முழுவதிலும் பல சமயங்களில், தங்கள் உறவினர்களே தங்களை அந்நியர்களாகக்கருதுகிறநிலைதான்பலகிறிஸ்தவர்களுக்குஏற்பட்டிருக்கிறது. அது கடினமான ஓர் அனுபவம். இயேசுவும் அதே கஷ்டத்தை அனுபவித்ததை மாற்குவின் இந்தப் பகுதி வெளிப்படுத்துகிறது. இத்தகைய வேதனையான தனிமையை அனுபவிப்பவர்களை அவரால் புரிந்துகொள்ள முடியும்; அவர்களுக்கு ஆறுதல்தர முடியும்.

# மேலும் படிக்க:

'ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா?' என்று கேட்டபோது இயேசு, "உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ? ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மைசெய்வது நியாயந்தான்" என்று பதிலளித்தார். மத் **12:10–12.**

'கூட்டத்தினர் முன்னிலையில் அந்த ஒற்றர்களால் கிறிஸ்துவுக்குப் பதிலளிக்க முடியவில்லை; ஏனென்றால் அது தங்களை சிக்கலில் மாட்டுமெனப் பயந்தார்கள். அவர் சொல்வது உண்மை என்பதை அறிந்திருந்தார்கள். தங்கள் பாரம்பரியங்களை மீறுவதைவிட, உபத்திரவத்திலுள்ள ஒருவனை அப்படியே விடலாமென்று நினைத்தார்கள்; ஆனால் ஒரு மிருகம் ஆபத்தில் சிக்கினால், அதன் உரிமையாளருக்கு இழப்பு ஏற்படாதவாறு அதைக் காப்பாற்றலாமென்று நினைத்தார்கள். இவ்வாறு, தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனைவிட வாய்ப்பேசமுடியாத ஒரு மிருகத்தின்மேல் அதிக அக்கறை காட்டினார்கள். சகல பொய்மார்க்கங்களின் செயல்பாடும் இப்படித்தான் இருக்குமென்பதை இது காட்டுகிறது. இவை உருவாகக் காரணம் தேவனுக்கு மேலாக தன்னை உயர்த்த மனிதன் விரும்புவதே; ஆனால், மிருகத்தைவிட இழிவாக மனிதனை இவை தாழ்த்துகின்றன. தேவனுடைய சர்வமகத்துவத்திற்கு எதிராகப் போர்செய்கிற எந்த மார்க்கமும் மனிதனுக்கு சிருஷ்டிப்பில் இருந்த மகிமையையும், கிறிஸ்துவுக்குள் அது அவனுக்கு மீண்டும் கொடுக்கப்படுவதையும் இல்லாமல் செய்கிறது. ஒவ்வொரு பொய்மார்க்கமும் தன் ஆதரவாளர்களிடம் மனித தேவைகள், துன்பங்கள், உரிமைகள் குறித்து அக்கறையற்றிருக்கக் கற்பிக்கிறது. சுவிசேஷமோ, மனிதன் கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டவன் என மனிதனுக்கு மிகுந்த மதிப்பைக் கொடுக்கிறது; மனிதர்களின் தேவைகள், வேதனைகள் குறித்து கனிவுமிக்க அக்கறை கொள்ளும்படி போதிக்கிறது. கர்த்தர், "புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்" என்று சொல்கிறார். ஏசா **13:12**'.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *மாற்கு 2இலுள்ள திமிர்வாதக்காரனைப்போல யாரிடமும் சொல்லமுடியாமல் உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவ உங்களிடமும் உங்கள் சபையிடமும் என்ன உத்திகள் அல்லது நடைமுறை வழிகள் உள்ளன?*

2. *இயேசுவை நிராகரித்த மதத்தலைவர்கள் வெறுப்பு, பாரம்பரியம், கோட்பாடு, மதம் ஆகியவற்றால் எவ்வளவுதூரம் குருடாக்கப்பட்டிருந்தால், அவரது அற்புதங்கள்கூட அவர்களது மனதைத் திறக்கமுடியாமல் போயிருக்கும்? இதேபோல் நமக்கு எதுவும் நேரிடாதவாறு, நாம் எவ்வாறு கவனமாக இருக்கலாம்?*

3. *விசுவாசத்தின்நிமித்தம் தங்கள் 'மரபணு' குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு உங்கள் உள்ளூர் சபை எவ்வாறு 'குடும்பமாக' மாறலாம்?*

4. *'மன்னிக்கப்படாத பாவம்' பற்றி அதிகமாகத் தியானியுங்கள். அதன் அர்த்தம் என்ன? அதைச் செய்யாமல் இருக்க என்ன செய்யலாம்? இவற்றை வகுப்பில் தியானியுங்கள்.*

# “ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமன்றி”

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

14 வயதே ஆன தன் சிநேகி தற்கொலை செய்து கொண்ட பிறகு, 14 வயது பாயேலின் வாழ்க்கை மாறியது. முன்பு கலகலவென இருப்பாள். இப்போது மூலையில் அமைதியாக உட்கார்ந்தாள். கத்தினாள்; நடுங்கினாள்; காரணமே இல்லாமல் பயந்தாள். இறந்த தன் சிநேகிதி போன்று யாரோ ஒருவர் தன்னை வந்து பார்ப்பதாக நினைத்தாள். “நீ என்னோடு வந்துவிடு” என்று அந்த உருவம் சொல்லியது. பாயேல் இரண்டுமுறை குதிக்க முயற்சித்திருக்கிறாள்; ஆனால் அவளுடைய பெற்றோர்தான் தடுத்தார்கள்.

விரக்கியிலிருந்த பெற்றோர், ரஸ்டமிடம் உதவி கேட்டார்கள். ரஸ்டம் ஓர் உலகலாவிய ஊழியர். ஆசியாவில் அவர்கள் வசித்துவந்த சத்தியம் நுழைந்திராத பகுதியில் ஒரு சபையை உருவாக்கிய முன்னோடி. பாயேலின் குடும்பத்தில் அவளுடைய அத்தை ஒருவர்தவிர வேறு யாரும் கிறிஸ்தவர் கிடையாது; அவர்தான் ரஸ்டம்பற்றி அவர்களிடம் சொல்லியிருந்தார். பாயேல் பார்ப்பது அவளுடைய சிநேகிதியை அல்ல, ஒரு தீய ஆவியை என்று ரஸ்டம் விளக்கினார். “நாம் இயேசுவிடம் ஜெபிக்கவேண்டும்” என்றார்.

ரஸ்டம் சபை அங்கத்தினர்கள் நான்கு பேருடன் பாயேலின் வீட்டிற்கு ஜெபிக்கச் சென்றார். பாயேலால் ஒரே இடத்தில் உட்கார முடியவில்லை. கத்தினாள்; கைகளை மேலும் கீழும் அசைத்தாள்; கால்களை உதைத்தாள். சென்றிருந்தவர்கள் பாடல்கள் பாடினார்கள்; ஆனால் அவர்கள் இயேசுவின் பெயரைச் சொன்னபோதெல்லாம், “நிறுத்துங்கள்! என்னால் மூச்சுவிட முடியவில்லை! யாரோ என் தொண்டையை நெரிக்கிறார்கள்” என்றாள்.

ரஸ்டம் வேதாகமத்தைத் திறந்து, இயேசு பிசாசுகளைத் துரத்தினதுபற்றி வாசித்தார். ஜெபித்தார். உடனே பாயேல் அமைதியானாள். உட்கார்ந்தாள், பேசினாள், தண்ணீர் குடித்தாள். தீய ஆவி அவளை விட்டுச் சென்றதாக ரஸ்டம் நினைத்தார். ஆனால் அன்று இராத்திரியில், பாயேலின் அத்தை ரஸ்டமை அழைத்தார். “பாயேல் மீண்டும் கத்த ஆரம்பித்துவிட்டாள். தன் தோழியைப் பார்ப்பதாகச் சொல்லுகிறாள்” என்றார்.

ரஸ்டமுக்கு குழப்பமாக இருந்தது. எங்கு தவறு நடந்தது? பிறகு, இயேசுவின் சீடர்கள் தீய ஆவியை விரட்டமுடியாமல் போன ஒரு வேதாகம சம்பவம் அவருக்கு ஞாபகத்திற்கு வந்தது. அதற்கு காரணம் என்னவென இயேசுவிடம் கேட்டபோது, “இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்”. மத் 17:21. ரஸ்டம் உலகளாவிய ஊழியர்கள் பலரை அழைத்தார்; அவர்கள் உபவாசமிருந்து, ஜெபித்தார்கள். பிறகு செவந்த்–டே அட்வென்டிஸ்ட் போதகரையும் அழைத்துக் கொண்டு, கூட்டமாக பாயேலின் வீட்டிற்குச் சென்றார்கள்.

வந்திருந்தவரகளைப் பார்த்ததும், பாயேல் அங்கிருந்து ஓட ஆசைப்பட்டாள். அவர்களால் அவளை அமைதிப்படுத்த முடியவில்லை. 30 நிமிடங்கள் பாடல் பாடினார்கள்; அவள் கத்திக்கொண்டே இருந்தாள். பிறகு, இயேசுவின் வல்லமைபற்றி போதகர் வேதாகமத்திலிருந்து பிரசங்கித்தபோது, மயங்கி விட்டாள். ரஸ்டம் அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து, எழுப்பிவிட்டார். யாரோ ஒருவர் அவளுக்கு குடிக்கத் தண்ணீர் கொடுத்தார்கள். பிறகு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ரஸ்டம் அவர்களுடைய வீட்டற் குச் சென்று ஜெபித்து, ஆராதனை செய்தார். அதன்பிறகு பாயேலுக்கு அந்த உருவம் தெரியவில்லை.